**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 142/2024 | எ.ம.சா. | : 1 |
| பெயர் | திரு. ராஜேஷ்குமார் | | |
| த/பெ. | : திரு. சுவாமிதாஸ் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறேன். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். TN 39 U 7610 வாகனத்திற்குண்டான பாலிசி எ.ம.சா.ஆ.1 ஆகவும், 24-02-2025 தேதியில் 2 ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எ.ம.சா.ஆ.2 ஆகவும், அதனை அவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை எ.ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக கருமத்தம்பட்டி காவல்நிலையத்தில் தருண் என்பவருக்கு எதிராகத்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

புலன்விசாரணைக்கு பின்னிட்டு அவருக்கு எதிராகத்தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எங்களது நிறுவனம் தான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.